**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**வழக்கு எண் :OS No: 12/2016 தேதி:30.09.2024**

**வா.சா. 1 – ராதாகிருஷ்ணன்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி :** ( 2 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில்)

வா.சா.ஆ 1 தானபத்திரம் வீரபத்திரன்செட்டியார் மகன் வீரப்பன்செட்டியார் எழுதி கொடுத்தார். மேற்படி பத்திரம் தளமனைஅம்பலம் உறவின்முறைக்கு எழுதி கொடுக்கப்பட்டுள்ளது. சொக்கன்செட்டியார் மகன் சொக்கலிங்கசெட்டியார், சுப்பன்செட்டியார் மகன் சொக்கப்பப்பசெட்டியார், ராமசாமிசெட்டியார் மகன் காமாட்சிசெட்டியார் என்ற மூவர் பெயரில் உள்ளது. மேற்படி மூவரும் தளமனைஅம்பலம் உறவின்முறைக்கு முக்கியஸ்தர்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் இடைசெருக்கல் உள்ளது யார் இடைசெருக்கல் செய்தார்கள் என்று தெரியாது. வா.சா.ஆ 1 பதிவு செய்த புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது. அசல் பிரதிவாதிகளின் கையில் உள்ளது. இடைசெருக்கல் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்ன நோக்கத்திற்கு எழுதிகொடுக்கப்பட்டது என்றால் நந்தவன தர்மத்தை மேற்பார்த்து வரவேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ 1 ஆவணத்தின் அடிப்படையில் தளமனைஅம்பலம் மேற்பார்வை செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு டவுண் சர்வே எண்.11/1 ஆகும். வா.சா.ஆ 3 ஆவணத்தில் சர்வே எண்.11/1 தளமனைஅம்பலத்தின் உறவுமுறை என்று உள்ளது என்றால் கோபுரம்தாங்கிவீரலிங்கசெட்டியார் பெயரிலிருந்து தளமனைஅம்பலம் உறவின்முறை பெயரில் 1996 ஆண்டு மாற்றப்பட்டுள்ளது. 1996 ஆண்டில் மாற்றம் செய்யப்பட்டதாக வா.சா.ஆ 3 ஆவணத்தில் குறிப்பு உள்ளதா என்றால் 1996 முதல் இன்று வரை உள்ள நிலபதிவேடு என்று உள்ளது. மேற்படி குறிப்புரையில் தாசில்தாரின் குறிப்பு உள்ளதா என்றால் ஆவணத்தின் அடியில் உள்ளது. வா.சா.ஆ 3 ஆவணத்தில் 1996 முதல் என்று நாங்களாவே எழுதிக்கொண்டோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தை தர்மத்திற்கு எழுதி கொடுத்த ஆவணம் வா.சா.ஆ 4 ஆவணம் ஆகும். சங்கரலிங்கசெட்டியார், வீரபத்திரன்செட்டியார், வீரலிங்கசெட்டியார் ஆகிய மூன்றுபேரும் சொக்கலிங்கபுரம் அருள்மிகு சுந்தர விநாயகர் கோவில் நந்தவன

தர்மத்திற்கு பாத்தியப்பட்டது என்று எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ 4 ஆவணத்தில் தாவா நந்தவன தர்ம நிர்வாகத்தை வேறு ஒரு நபருக்கு மாற்ற கூடாது என உள்ளதா என்றால் உள்ளது. அது மாதிரி சரத்து எதுவும் இல்லை எனவும் வில்லங்கம் செய்ய கூடாது என்று தான் சரத்து உள்ளது என்றால் சரிதான். 4, 5, 6 பிரதிவாதிகளுக்கு நந்தவனதர்மத்தை நிர்வாகம் செய்ய அனுமதி அளித்தது சட்டப்படி செல்லும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 5 ஆவணம் 1905 ஆண்டில் சங்கரலிங்கசெட்டியார், வீரபத்திரன்செட்டியார், வீரலிங்கசெட்டியார் ஆகிய மூன்றுபேரும் கிரையம் வாங்கி பத்திரமாகும். வா.சா.ஆ 6 ஆவணம் 1956 ஆண்டில் செட்டில்மெண்டு ரிஜிஸ்டர் நகலாகும். வா.சா.ஆ 6 ஆவணத்தில் 1956 வருட ஆவணம் என்று உள்ளதா என்றால் இல்லை. அருப்புக்கோட்டை தற்போது நகராட்சியாகிவிட்டது. எந்த வருடத்திலிருந்து என்று தெரியாது. வா.சா.ஆ 6 ஆவணத்தில் நந்தவனம் மற்றும் மடம் என்று காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கோபுரதாங்கி வீரலிங்கசெட்டியார் பட்டா எண்.160 என்று காட்டப்பட்டுள்ளது. நந்தவனம், மடம் என்று செட்டில்மெண்டு பட்டாவில் உள்ளது. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ 2 ஆவணத்தில் நந்தவனம், மடம் என்று காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சதுர கிணறு காட்டப்பட்டுள்ளது. இது 1956 ஆண்டின் செட்டில்மெண்டு ரிஜிஸ்டர் நகலாகும். என் பிராதில் 4,5,6 பிரதிவாதிகளுக்கு ஏற்பட்ட செட்டில்மெண்டு ஆவணம் செல்லாது மற்றும் இல்லாநிலை ஆவணம் என்று நான் பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் பிராதில் அவ்வாறு பரிகாரம் கோரவில்லை என்றால் அவசியம் இல்லை என்பதால் கோரவில்லை. தாவா சொத்தில் கட்டிடம் கட்டுவதற்கு 4,5,6 பிரதிவாதிகள் நகராட்சியில் மனு கொடுத்திருந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. தற்போது நான் நகை மதிப்பீட்டளராக இருக்கிறேன். இதற்கு முன்பு வக்கீல் குமாஸ்தாவாக இருந்தேன். நான் வக்கீல் குமாஸ்தாவாக இருந்ததால் சட்ட நுணுக்கங்கள் பற்றி தெரிந்ததால் நேரடியாக பதில் சொல்லாமல் மலுப்பலாக பதில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு மின்இணைப்பு உள்ளது என்றால் வழக்கிற்கு பின்பு வாங்கப்பட்டது. மின்இணைப்பு வழக்கிற்கு முன்பே வாங்கப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை அருள்மிகுசுந்தரவிநாயகர்

மடத்திற்கு பாத்தியமானது என்று 2வது பரிகாரமாக விளம்புகை பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் சுந்தரவிநாயகர் என்று கோவில் உள்ளதா என்றால் பிரதிவாதிகள் அப்புறப்படுத்திவிட்டார்கள். எந்த தேதியில் அப்புறப்படுத்தப்பட்டது என்று தெரியாது. வழக்கிற்கு முன்பே அப்புறப்படுத்திவிட்டார்கள். வழக்கிற்கு எத்தனை வருடத்திற்கு முன்பு அப்புறப்படுத்தினார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் பங்காளிகள் பாகத்தில் வந்ததால் புகார் கொடுக்க வேண்டாம் என்று பங்காளிகள் சொன்னதால் புகார் கொடுக்கவில்லை. சுந்தரவிநாயகர்கோவில் யார் பங்கு என்றால் 1 முதல் 3 பிரதிவாதிகள் பாகத்தில் உள்ள இடத்தில் கோவில் இருந்ததால் நான் புகார் அளிக்கவில்லை. 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் கிழக்கு பாகமா, மேற்கு பாகமா என்றால் பொதுவாக தான் வைத்திருந்தோம். நான் சொல்லும் கோவில் கிணற்றிக்கு அருகில் இருந்தது. கிணறு தென்கிழக்கு பகுதியில் இருந்தது. கிணறை மூடி எத்தனை வருடங்களாகிறது என்று எனக்கு தெரியாது. இயற்கையாகவே மூடிவிட்டது. என் சொத்துவிபரத்தில் கோவில் உள்ள விவரத்தையும் அதில் சிலை இருந்த விவரத்தையும் கூறவில்லை என்றால் சரிதான். என் பிராதில் சொல்லியுள்ளேன். என் பிரமாணவாக்குமூலத்தில் பாரா 3ல் தாவா சொத்தில் இருந்த நந்தவனம் காலபோக்கில் அழிந்துவிட்டது. காலபோக்கில் கிணறு தூர்ந்துவிட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மடம் தாவா சொத்தின் தென்மேற்கு பகுதியில் உள்ளது என்றால் சரிதான். மடத்திற்குள் சுந்தரவிநாயகர்கோவில் பீடம் இருந்தது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விநாயகர் கோவில் சிலை பற்றி சொல்லவில்லை என்றால் அது இல்லை என்பதால் நான் சொல்லவில்லை. சிலை எந்த வருடம் இல்லாமல் போனது என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள கட்டிடம் தாவா சொத்தில் இருப்பதுபோல் இல்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளவாறு தாவா சொத்தின் தென்கிழக்கு மூலையில் தளமனைஅம்பலத்தின் அமரர் ஊர்தி மற்றும் செட் உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கிற்கு பின்பு ஏற்பட்டது. மேற்படி புகைப்படம் பி.வா.சா.ஆ1 ஆகும். என்னிடம் காட்டப்படும் புகைபடத்தில் உள்ளவாறு செங்கல்களவாசல் இருந்ததற்கான அமைப்பு தாவா சொத்தில் கிடையாது. என்னிடம்

காட்டப்படும் புகைபடத்தில் தாவா சொத்தில் உள்ள தகரசெட் என்றால் அது வழக்கிற்கு பின்பு ஏற்படுத்தப்பட்டது. அது பி.வா.சா.ஆ 2 ஆகும். என்னிடம் காட்டப்படும் புகைபடத்தில் தாவா மடத்தில் உள்ள உள்அமைப்பு என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ 3 ஆகும். என்னிடம் காட்டப்படும் புகைபடத்தில் தாவா மின்இணைப்பு என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் தளமனைஅம்பலத்தை சேர்ந்த கரு.சொ.வீ.வீரப்பன்செட்டியாரின் சமாதியானது அமரர் ஊர்திக்கு பக்கத்தில் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சமாதியானது தாவா சொத்தில் 60 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் இயற்கை அமைப்பை காட்டக் கூடிய நீதிமன்ற ஆணையர் நியமன மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள இயற்கை அமைப்பு நீதிமன்றத்திற்கு தெரியகூடாது என்பதற்காக ஆணையர் நியமன மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 29.07.1956 அன்று செட்டில்மெண்டு பத்திரத்தில் 1ம் பிரதிவாதியின் தந்தை அண்ணாமலைசெட்டியார் மற்றும் என் தந்தை ஆகியோர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் தெரியாது. இவ்வழக்கில் பெண்வாரிசுகள் யாரும் தெரியாது அதனால் வழக்கில் சேர்க்கவில்லை. இவ்வழக்கின் 9, 10 பிரதிவாதிகள் என்ன உறவுமுறை என்றால் 10ம் பிரதிவாதி என் சகோதரர் ஆவார். 10 ம் பிரதிவாதி ஒரு எதிர்கோரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அவர் நான் என் பிராதில் என்ன சொத்து விவரம் போட்டுள்ளேனோ அதே சொத்து விவரத்தை எதிர்கோரிக்கையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அவர் அசல் வழக்கை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார் என்றால் சரிதான். 10ம் பிரதிவாதியின் எதிர்கோரிக்கையில் 2வது பரிகாரமாக தாவா சொத்து அருள்மிகுசுந்தரவிநாயகர்கோவில் மடத்திற்கு பாத்தியமான தர்மசொத்து என்று விளம்புகை செய்ய கோரியுள்ளார் என்றால் சரிதான். எதிர்கோரிக்கையில் என்னை 2ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளார் என்றால் சரிதான். அந்த எதிர்கோரிக்கைக்கு நான் எதிர்வழக்குரை எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். எதிர்கோரிக்கையை பார்த்து தான் என் பிராதை திருத்தம் செய்தேன் என்றால் எதிர்கோரிக்கை ஆவணங்களை பார்த்து திருத்தம் செய்தேன். தளமனைஅம்பலத்திற்கு தாவா சொத்தை மேற்பார்வை செய்யும் உரிமை மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது என்று

என் பிராது மற்றும் வாக்குமூலத்திலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். தளமனைஅம்பலம் தாவா டிரஸ்டை நிர்வாகம் செய்யவில்லை என்றும் தர்மகாரியம் செய்யவில்லை என்று கட்சி செய்கிறேன் என்றால் சரி தான். என்னுடைய பிராதிலும் வாக்குமூலத்திலும் தளமனைஅம்பலம் முக்கியஸ்தரும் சட்டமன்ற உறுப்பினருமான எம்.டி.ராமசாமிசெட்டியார் சமாதியை வைத்துள்ளதாக ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த சமாதியை அகற்றுவதற்காக பரிகாரம் எதுவும் கோரவில்லை. சமாதி வைக்கும்போது நான் ஆட்சேபணை செய்ததாக என் பிராது மற்றும் வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு தளமனைஅம்பலத்தின் உறவுமுறையினர் 1 முதல் 3 பிரதிவாதிகளின் பாகத்தில் வைத்து கொள்கிறோம் என்றும் பாகம் பிரிக்கும்காலத்தில் வாதிகள் மற்ற பகுதிகளை எடுத்து கொள்ளுமாறு கூறிவிட்டார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அது எந்த ஆண்டில் நடந்தது என்றால் 2016 ஆண்டில் நடந்தது. அதற்கு நான் ஒப்புக்கொள்ளவில்லை. 1 முதல் 3 பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டார்கள். போலிஸ் புகார் கொடுத்துள்ளேனா என்றால் உறவின்முறையை எதிர்த்து கொடுக்க முடியாது என்பதால் கொடுக்கவில்லை. தாவா சொத்தில் பிரதிவாதிகள் எத்தனை கல்வெட்டு வைத்துள்ளார்கள் என்றால் மடத்தில் வைத்துள்ளார்கள். எந்த வருடம் என்று ஞாபகம் இல்லை. எம்.டி.ஆர் சமாதியில் கல்வெட்டு உள்ளதா என்றால் இருக்கலாம். என் வாக்குமூலத்தில் 25.06.2015 அன்று எம்.டி.ஆர் சமாதியில் மணிமண்டபம் கட்டியுள்ளார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அப்போது தென்கிழக்கு மூலையில் செட் ஒன்று கட்டியுள்ளார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் இல்லை. அப்போது நான் ஆட்சேபணை செய்ததில் ஊர்பெரியவர்கள் கிழக்கு பகுதியை எங்களை எடுத்து கொள்ள கூறினார்கள் அதை நாங்கள் ஒப்புக்கொண்டு ஆட்சேபணையை நிறுத்திவிட்டோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பாகம் பிரிக்கும்போது எம்.டி.ஆர் சமாதி மற்றும் மணிமண்டபம் இருக்கும் பகுதியை 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கி விட்டு மடம் மற்றும் காலியிடம் இருக்கும் பகுதியை வாதிகளுக்கு ஒதுக்க வேண்டும் என்று கேட்டுள்ளேன் என்றால் சரிதான். மடம் மற்றும் அதற்கு வடக்கு புறம் இருப்பதை எங்களுக்கு ஒதுக்கவேண்டும் என்று நான் கோருகிறேன். அதற்கு கிழக்குபக்கம் உள்ள பகுதியை 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு

ஒதுக்கலாம். பிராதில் மேற்கண்டவாறு சொல்லியுள்ளளேனா என்றால் சொல்லியுள்ளேன். 10ம் பிரதிவாதி வேலுமணி எதிர்கோரிக்கை தாக்கல் செய்த பிறகு தான் 1905 ஆண்டு பத்திரம் பற்றி தெரியவந்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றும் வழக்கிற்கு முன்பே தெரியும் என்றால் சரியல்ல. 21.05.1920 அன்று தானபத்திரம் பற்றி எனக்கு 9, 10ம் பிரதிவாதிகளின் எதிர்கோரிக்கை வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் எனக்கு தெரியவந்தது. வீரபத்திரன்செட்டியார், சங்கரலிங்கசெட்டியார் இறந்த பிறகு அவர்களின் வாரிசுகள் தர்மத்தை நடத்த விரும்ப வில்லை என்று என் பிராது மற்றும் வாக்குமூலத்தில் கூறியுள்ளது உண்மை தான் என்றால் சரிதான். 4,5,6 பிரதிவாதிகள் தேவாங்கர் வர்த்தக சங்கத்திற்கு எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை நகல் எடுத்து தாக்கல் செய்யவில்லை. வழக்கிற்கு பிறகு தான் எனக்கு தெரியும். வழக்கிற்கு பின்பு தான் தெரியும் என்று என் பிரமாணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். 4,5,6 பிரதிவாதிகள் வர்த்தக சங்கத்திற்கு எழுதிகொடுத்த தானசெட்டில்மெண்டு ஆவணத்தை 1989 ஆண்டு ரத்து செய்துவிட்டார்கள் என்றால் சரிதான். 1920 ஆண்டு தர்மபத்திரத்தில் பெண்மக்களுக்கு உரிமை இல்லை என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்படவில்லை. தளமனைஅம்பலத்தின் நிர்வாகத்தினர் டிரஸ்டை தொடர்ந்து நடத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் போட்டுள்ள வழக்கு காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1905, 1920, 1956 ஆகிய ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட ஆவணங்களை பற்றி வழக்கிற்கு முன்பே தெரியும் என்றும் அதை மறைத்து நான் வழக்கை தாக்கல் செய்துள்ளதால் அது முரண்தடையாக பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் போட்டுள்ள வழக்கு சட்டப்படி செல்லாது அதில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை :** ( 1 மற்றும் 9,10 மற்றும் 11,12 பிரதிவாதிகள் தரப்பில்)

1 மற்றும் 9, 10 மற்றும் 11, 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று கூறப்பட்டது.

**குறுக்கு விசாரணை :** ( 7 ம் பிரதிவாதி தரப்பில்)

தாவா சொத்தில் கட்டிடம் அனுமதி வரைபடம் 4,5,6 பிரதிவாதிகளுக்கு வழங்க

கூடாது என்று பரிகாரம் கோரியுள்ளேன் இது வரை நகராட்சியிலிருந்து அவ்வாறு எந்த ஒரு அனுமதியும் 4,5,6 பிரதிவாதிகளுக்கு வழங்கப்படவில்லை என்றால் சரிதான். உரிமை ஆவணங்களை பார்த்து அனுமதி கொடுக்க நகராட்சிக்கு அதிகாரம் உள்ளது என்றால் சரிதான். 7ம் பிரதிவாதி இந்த வழக்குக்கு தேவையில்லாத கட்சி என்றால் சரியல்ல. 7ம் பிரதிவாதிக்கு எதிராக எந்தவித பரிகாரமும் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. 7ம் பிரதிவாதியை பொறுத்து இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.